பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 51

வியாழக்கிழமை
16 ஜனவரி 2025

தை 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தீயில் எரிந்து மூதாட்டி பலி

யாழ்ப்பாணம், ஜன. 16
நுளம்புக்கு புகைமூட்டியபோது தீ தவறுதலாகப் பற்றிக் கொண்டதில் மூதாட்டியொருவர் உயிரிழந்துள்ளார்.
கடந்த 13ஆம் திகதி 11

## அநுரவை விரட்ட மக்கள் தயார்!

மஹிந்த கண்டுபிடிப்பு 09

## அரசியல்கைதிகளை உடன் விடுவிக்குக!

மனோ கணேசன் அரசுக்குக் காட்டம் 02

# இலங்கையின் மீட்சிக்கு சீனா கைகொடுக்கும்!

ஜனாதிபதி அநுரவிடம் சீன அதிபர் வாக்குறுதி



பீஜிங், ஜனவரி 16

இலங்கையில் அபிவிருத்திப் பணிகளுக்காக சீனா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்று ஜனாதிபதி அநுரகுமாரவிடம், சீன அதிபர் ஜின்பிங் தெரிவித்துள்ளார். 11

## 15 ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, ஜன. 16
இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் மூலம் இலங்கைக்குப் பல நன்மைகள் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 11

சீனாவைப்பற்றி

## இலங்கையில் விமர்சித்ததைப்போல் சீனாவில் வாய்திறக்கவேண்டாம்!

ஜனாதிபதி அநுரவை சீண்டுகிறது பெரமுன

கொழும்பு, ஜன. 16
சீனா தொடர்பில் இலங்கையில் கூறிய விடயங்களைத் தயவுசெய்து பீஜிங்கில் கூறிவிடவேண்டாம் என்று ஜனாதிபதி அநுரவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 11

## மல்வத்து ஓயாவில் இளைஞர் மாயம்!

தேடுதல்கள் தீவிரம்

மன்னார், ஜன. 16
மடுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமற்போயுள்ளார்.
புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய 11

## தொலைபேசி வயர்கள் நெல்லியடியில் அறுப்பு

பொலிஸார் அசமந்தம்
பொதுமக்கள் சாடல்

யாழ்ப்பாணம், ஜன. 16
நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில், தொலைபேசி இணைப்பு வயர்கள் விஷமிகளால் அறுத்தெடுக்கப்பட்டுள்ளன. 11



அறுவடைக்குத் தயாராக இருந்த

## ஆயிரம் ஏக்கர் நெல்லை விழுங்கியது வெள்ளம்!

முல்லைத்தீவு, ஜன. 16
முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாறுப் பகுதியில், அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. 11

## குருநகரில் நேற்றிரவு திடீர் சுற்றிவளைப்பு!

பொதுமக்கள் மத்தியில் அச்சம்

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர், பொலிஸார், இராணுவத்தினர் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் குவிக்கப்பட்டு 11



வாள்வெட்டில்

## இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 16
பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக 11

முச்சந்தி முரளி



'முழுசா சீனலங்காவா மாறிக்கொண்டிருக்கிற சிறீலங்காவை நல்லாப் பாருங்கோ'

## போதையில் தள்ளாடிய 2 மாணவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் போதையில் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அவர்கள் 11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
15 EDITION
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds
JITF 2025
இன்னும் 8 நாட்களில்
ORGANIZED BY LECS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழைய பல்லவியை ஓதாமல் அரசியல்கைதிகளை விடுவிக்குக

## மனோ கணேசன் வலியுறுத்து



**கொழும்பு, ஜன. 16**
**'சிறையில் அரசியல்கைதிகள் இல்லை' என்று பழைய பல்லவியைத் தொடர்ந்தும் பாடாமல், புதுப் புரட்சி செய்யப் போகிறோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளை உடனே விடுவிக்கவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 'சிறையில் அரசியல் கைதிகள் இல்லை' என்ற கருத்தைக் கூறியிருக்கிறார். அன்று அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிப் போராடிய தமது கட்சி அங்கத்தவர்களை "அரசியல் போராளிகள்" என்று கூறிய ஜே.வி.பி. இன்று தமிழ் அரசியல்கைதிகளை "அரசியல் கைதிகள்" என அங்கீகரிக்க மறுக்கிறது. 2015 - 2019 கால நமது நல்லாட்சியிலும் ஓரிரு அமைச்சர்கள் இவ்வாறு சொன்னார்கள். அவர்களைக் கண்டித்து, புறந்தள்ளி, தமிழ்த்தேசியக் கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல்கைதிகளை நாம் விடுவித்தோம். தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான். இதில்மாற்றுப்பேச்சுக்கு இடமில்லை. ஆனால், அன்று ஆயுதப் போராட்டம் செய்த ஜே.வி.பி.யே, இன்று "அரசியல் கைதிகள் இல்லை" என்று கூறி, அவர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகிறது. இந்த இரட்டை வேடம், இவர்களுக்கு வாக்களித்த தமிழர்களுக்குத் தான் வெளிச்சம்- என்றார். (ச-இ)



# தோல்வியுற்றோர் சங்கமிப்பால் எந்தவித மாற்றமும் நிகழாது!

கொழும்பு, ஜன. 16
ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவதால் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்று அமைச்சர் கே.டீ.லால்காந்த தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ரணிலின் கட்சியும், சஜித்தின் கட்சியும் தேர்தல்களில் படுதோல்வியடைந்த கட்சிகள். இவ்விரு கட்சிகளும் இணைவதால் நாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படாது.
இந்தக் கட்சிகளின் இணைவு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஒருபோதும் சவாலாக அமையாது.
இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனிச்சிறப்பு இருந்தது. அதை இறுதியில் ரணில் இல்லாதொழித்துவிட்டார்.
ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆரம்பத்தில் மக்கள் அலை மெல்ல வீசியது. எனினும், சஜித்தின் இயலாமையை அறிந்த மக்கள் அந்தக் கட்சியை நிராகரித்துவிட்டார்கள். ரணிலினதும் சஜித்தினதும் தலைவர் பதவி ஆசையே இந்த இரண்டு கட்சிகளினதும் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாகும்- என்றார். (ச-இ)

# ரணிலின் பாதையிலேயே தொடர்வது ஆபத்தில்லை

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16
நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பாதையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தயாரித்துள்ளது. அந்தப் பாதையில் தற்போதைய அரசாங்கம் கவனமாகச் செல்லவேண்டும். இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கின்றது. இந்தப் பாதை மிகவும் அவதானமிக்கதாகும். ஆனால் அதைத் தவிர வேறு வழியில்லை. தற்போதைய அரசாங்கம் அந்தப் பாதையில் கவனமாகச் செல்லாவிட்டால் ஆபத்தான பிரதிபலன்கள் உருவாகும் - என்றார். (எ-இ)

# புகைப்படக் கண்காட்சிக்கு அரசாங்கத்தால் அனுமதி!

## ரஷ்யத் தூதரகம் அதிருப்தி

கொழும்பு, ஜன.16
சர்வதேசப் புகைப்படக்கண்காட்சியை இலங்கையில் நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியமைக்கு ரஷ்யத் தூதரகம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.
இது தொடர்பாக ரஷ்யத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,
இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் கொழும்பிலுள்ள நெதர்லாந்துத் தூதரகமும் இணைந்து சர்வதேசப் புகைப்படக்கண்காட்சியொன்றை கடந்த 10- 14 திகதிகளில் ஏற்பாடு செய்திருந்தன.
இந்தப் புகைப்படக்கண்காட்சியில் ரஷ்யா- உக்ரைன் போரின் போது ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. உண்மையில் இந்த ஒளிப்படங்கள் மேற்குலகினால் போலியாகத் தயாரிக்கப்பட்டவை. இந்தப் புகைப்படக் கண்காட்சிக்கு அனுமதி வழங்கியமை இலங்கை-ரஷ்ய மரபுரீதியான உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள் ளது.
அதேவேளை இந்தப் புகைப்படக்கண்காட்சி 23-27ஆம் திகதிகளில் யாழ்ப்பாணக் கலாசார மையத்தில் நடைபெறவுள்ளதுடன் ஜனவரி 31 தொடக்கம் பெப்ரவரி 2 வரை காலி மாநகரசபைக் கூடத்திலும் நடைபெறவுள்ளது. (ச-6)



# சிகிரியாவை இரவில் பார்க்கமுடியாது

கொழும்பு, ஜன. 16
சிகிரியா இரவு நேர பயணத்துக்காகத் திறக்கப்படும் எனப் பரவிவரும் செய்திகளை புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இன்று மறுத்துள்ளது.
அத்தகைய முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. சிகிரியா இரவு நேரத்தில் பார்வையிட திறக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பரீட்சைக்கட்டணத்தால் மாணவர்கள் பாதிப்பு

## ரஜீவன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழப்பாணம், ஜன. 16
வடக்கு மாகாணத்தில் மாணவர்கள் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதால் எதிர்நோக்கும் சிரமங்களைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்துள்ளார்.
அரசு கல்விக்கு ஒதுக்கும் நிதியில் வருடாந்த நிதி ஒதுக்கீடு மூலம் மாணவர்களுக்கு வினாத்தாள்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும். 2025 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் வட மாகாணக் கல்வி அமைச்சு இந்தத் தேவையைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25,36)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | 0425 | C | 0 9 8 8 4 4 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | 2691 | D | 03 14 42 63 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | Y | 12 23 42 69 | 4852 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | மீனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | ♓ | 13 16 19 24 | 4403 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | G | 22 | 14 17 54 58 | 1867 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | X | 15 47 54 60 | 2517 |

**JAYODA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| --- | --- | --- | --- | --- |
| 15.01.2025 | புதன்கிழமை | L | 01 22 31 61 | 2095 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் அத்துமீறல்; இராஜதந்திர ரீதியில் அணுகல்

கொழும்பு, ஜன.16

வடபகுதிக்கடலில் இடம்பெற்றுவரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக இந்தியாவுடன் இராஜதந்திர ரீதியில் புதிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக மீன்பிடித்துறைப் பிரதியமைச்சர் ரத்னகமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் இந்திய விஜயத்தின்போது வடபகுதிக்கடலில் இடம்பெற்றுவரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. எனினும் இறுதிமுடிவு எட்டப்படவில்லை.
தமிழ்நாட்டு மீனவர்கள் சட்டவிரோத இழுவை டிப்படகுத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனால் கடல்வளம் அழிக்கப்படுகின்றது. இதனை அவர்கள் உணரவோ ஏற்றுக்கொள்ளவோ மறுக்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது இருநாட்டு மீனவர்களுமே. எனவே இந்த விடயத்தை இராஜதந்திர ரீதியில் கையாண்டு இதற்குத் தீர்வுகாண வேண்டும் - என்றார். (ச-6)

# இலங்கை - இந்திய உறவு எவராலும் பிரிக்கமுடியாது

## இந்தியத் தூதுவர் பெருமிதம்

கொழும்பு, ஜன.16
இலங்கை - இந்திய உறவை எவராலும் பிரிக்கமுடியாது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா தெரிவித்துள்ளார். நாமனைவரும் சகோதர, சகோதரிகள். எதிர்காலத்திலும் நாமனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா இவ்வாறு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)



# சிறுமி துஷ்பிரயோகம் லொத்தர் விற்பனையாளர் கைது

கொழும்பு, ஜன. 16
ஒன்பது வயதுச் சிறுமியைப் பாலியல்துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்யும் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பாதிக்கப்பட்ட சிறுமியின்தாயார் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய 69 வயதுடைய சந்தே கநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



# இறக்குமதி வாகனங்களுக்கு விதிக்கப்படவுள்ள வரிகள்

கொழும்பு,ஜன.16
இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு விதிக்கப்படவுள்ள வரி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
அந்தவகையில் வெகனர் ரக வாகனங்களுக்கு முன்பு 1.6 மில்லியன் ரூபா வரி விதிக்கப்பட்டநிலையில் புதிய வரி 1.8 மில்லியன் ரூபாவாகவும், டொயட்டோ விட்ஸ் வாகனத்துக்கு முன்னைய வரி 2 மில்லியன் ரூபா விதிக்கப்பட்ட நிலையில்தற்போது புதிய வரி 2.45மில்லியன் ரூபாவாகவும் டொயட்டோ கொரலா வாகனத்துக்கு முந்தைய வரி 5.7 மில்லியன் ரூபாவாக இருந்த நிலையில் தற்போது புதிய வரி 6.6மில்லியன் ரூபாவாகவும் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-40-6)

# போலி மருத்துவர்கள்; அரசாங்கம் வலைவீச்சு

யாழ்ப்பாணம், ஜன.16
நாட்டின் 9 மாகாணங்களிலும் போலி மருத்துவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதுதொடர்பில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்,
மருத்துவத்துறை மகத்தானது. போலி வேடம் தயாரித்து எவரும் மருத்துவத்துறைக்குள் உள்நுழைய முடியாது. மக்களின் உயிருடன் விளையாட எவருக்கும் இடமளிக்கமுடியாது.
எனவே அத்தகைய போலி மருத்துவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

# சுற்றுலாத்துறையால் வருமானம் உயர்வு!



கொழும்பு, ஜன.16
2024 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தச் சுற்றுலாத்துறை வருமானம் 53.2 வீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.
2023 ஆம் ஆண்டில், 1,487,303 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ள நிலையில், அதனூடாக 2,068 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 2,053,465 ஆகப் பதிவான நிலையில், அதனூடாக 3,168.6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது ஆண்டு அடிப்படையில் 53.2 வீத வளர்ச்சியாகும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)




வசதி இல்லாத, வயதான ஆக்களுக்கு அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் யானைப் பசிக்குச் சோளம் போட்டமாதிரி உதவிப்பணம் எண்ட பேரில எப்பன் காசு குடுக்கிறது. அந்தக் காசு நாலுநாள் சாப்பாட்டுக்கே காணாதுதான். அதால 'பிச்சைக்காசு' எண்ட பட்டப்பேரும் இந்த உதவிப்பணத்துக்கு இருக்குது. எண்டாலும் ஒண்டுமில்லாததுக்கு இப்பிடி ஒவ்வொரு மாதமும் பிச்சைக்காசாவது கிடைக்குதே எண்டு அந்த வசதியில்லாத வயசான ஆக்கள் ஒவ்வொரு மாதமும் அதை நேரிலபோய் வாங்கிக்கொண்டுவந்து, தங்கட சீவியத்தை எப்பிடியோ போக்காட்டிக் கொண்டு இருக்கினம். இப்ப என்னெண்டால் அந்தப் பிச்சைக்காசை வைச்சே தங்களை அதிகாரிமார் அலைக்கழிக்கினம் எண்டு அந்த ஏலாதவை அழாக்குறையாச் சொல்லுகினம்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில உள்ள 200 பேருக்கு இப்ப ரண்டு மாதத்துக்கு மேல இந்தக் காசு குடுபடேலையாம். முதல் உந்தக்காசு போஸ்ட் ஒப்பீஸிலதான் குடுபட்டது. பிறகு அரசாங்கம் என்ன நினைச்சுதோ தெரியாது, அந்தக் காசை சமுர்த்தி வங்கியில தான் எடுக்கலாம் எண்டு ஓர்டர் போட்டது. அதுக்குப் பிறகு அங்கதான் உந்தக்காசைக் குடுத்தவை. பிறகு என்னடாவெண்டால், பழையபடிபருத்திமூடையைக்குடோனிலையே வைச்ச கதையா திரும்பவும் போஸ்ட் ஒப்பீஸில போய் காசை வாங்குங்கோ எண்டு அரசாங்கம் சொல்லிப்போட்டுது. இதாலதான் இப்ப அந்தக் காசை வாங்கிறவை சண்டிலிப்பாயில ரண்டு மாதத்துக்கும் மேல அந்தக் காசு கிடைக்காமல் அந்தரிக்கினம்.

வழக்கம்போல அவையள் உந்தக் காசை வாங்க போஸ்ட்ஒப்பீஸுக்குப்போயிருக்கினம். ஆனால் அங்கபோனால் 'உங்களுக்கு அஸ்வெசுமக் காசு வரும்தானே. அதோட சேர்த்து இதையும் தருவினம்' எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் அவையள் சொன்னமாதிரி இந்தக்காசு அப்பிடி அஸ்வெசுமவோட சேர்த்துக் குடுபடேலை. பிறகும் 'ஏன் இன்னும் காசு வரேலை? எண்டு கேட்டால், ' உங்கட தகவல்களில சில பிழையள் இருக்கு. அதை மீளாய்வு செய்யோணும், மீட்டிங் வைச்சுத்தான் முடிவெடுக்கோணும்' எண்டு சாட்டுக்கு மேலசாட்டுச் சொல்லுகினமாம். ஏழைபாழையளுக்கு கிள்ளிக்குடுக்கிற உந்த எப்பன்காசுக்கு கூட இப்பிடி மாதக்கணக்கில குடுக்காமல், அதில்லை, இதில்லை எண்டு அலையவிடுறதும்,மீளாய்வு, மீட்டிங் எண்டு பேய்க்காட்டுறதும் தான் அநுர அரசாங்கத்தின்ர மாற்றமோ எண்டு பாவப்பட்ட அந்த அப்பாவியள் கேக்கினம். ஆருக்கும் அவையின்ர குரல் கேக்குமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** காரிய அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாமதம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.



# கால்நடைகளால் பயணிகள் அவதி

யாழ்ப்பாணம், ஜன.16

ஏ-9 பிரதான வீதியில் பயணம் செய்யும்போது கட்டாக்காலிக் கால்நடைகளால் விபத்துகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சாவகச்சேரி நுணாவில் பகுதியில் அவிழ்த்து விடப்பட்ட ஆடுகள், மாடுகள் வீதியின் குறுக்காகச் செல்கின்றன.

இதனால் விபத்துகள் ஏற்படுவதுடன் உயிர்ச்சேதங்களும் நிகழ வாய்ப்புள்ளது. பெரும்போக நெற்செய்கையின் அறுவடைக்காலம் வரை கால்நடைகளைக் கட்டிவளர்க்கவேண்டும் என விவசாய சம்மேளனங்களால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளபோதிலும் கால்நடைகள் வீதிகளில் அலைந்து திரிகின்றன. எனவே, இதனைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் சுட்டிக்காட்டினர். (ச-28)

## களஞ்சிய அறை திறப்புவிழா

கிளிநொச்சி , ஜன.16

கிளிநொச்சி பேராலை சி.சி.த.க பாடசாலையின் புதிய களஞ்சிய அறைத் திறப்புவிழா அதிபர் க. ராமதாஸ் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக பளைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மாலதி ரமேஸ், பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.திலீபன், கிளிநொச்சி வடக்கு வலயக்கல்வி அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.பரமேஸ்வரன், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் சி.செல்வராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-22-159)



# நாகர்கோவிலில் ஒதுங்கிய மர்மவீடு

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் நேற்று அதிகாலை மர்மவீடு ஒன்று கரையொதுங்கியுள்ளது. காலநிலை மாற்றம் மற்றும் கடல் சீற்றங்கள் தென் கிழக்கு ஆசியா நாடுகளில் அண்மையில் ஏற்பட்டன.

இந்தநிலையில் குறித்த மர்மவீடு மியான்மர், தாய்வான், தாய்லாந்து, மலேசியா அல்லது இந்தியா போன்ற ஏதாவது ஒரு நாட்டிலிருந்து வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. குறித்த மர்மவீட்டில் பௌத்த சமயத்தைத் தாங்கிய பல மரபு அம்சங்கள் காணப்படுகின்றன. குறித்த வீட்டைப் பொதுமக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ச-26,500,9)

## முத்துஐயன்கட்டுக்குளம் 2 வான்கதவுகள் திறப்பு

முல்லைத்தீவு,ஜன.16

முத்துஐயன்கட்டுக்குளத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் முத்துஐயன் கட்டுக்குளத்தின் நீர்மட்டம் 24'8" ஆக உயர்ந்துள்ளது.

இந்தநிலையில் நீர்வரத்து அதிகரித்ததையடுத்து இரு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. எனவே குளத்தின் கீழ் தாழ்வான பகுதிகளில் வாழ்கின்ற மக்களை அவதானமாக இருக்கும்படி முல்லைத்தீவு மாவட்டப் பேரிடர் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-40)

## இராணுவத்தினரால் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 16

இராணுவத்தின் 51 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் பொங்கல்விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது கோலம் போடுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன. நிகழ்வில், பிரபல [illegible] விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-25, 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

பழிவாங்குதல் வீரமன்று
பொறுப்பதே வீரம்.

– ஷேக்ஸ்பியர் –

# ‘13’ மட்டுமல்ல அதையும் தாண்டி.... !

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கைவைக்கமாட்டோம் என்று அறிவித்திருக்கின்றார் கடற்றொழில் அமைச்சரான இராமலிங்கம் சந்திரசேகர். அயலகத் தமிழர் விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியாவுக்குச் சென்றுள்ள அவர், இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான அநுர அரசின் நிலைப்பாட்டைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளார். 13ஆவது திருத்தம் தொடர்பில் தாம் (அரசாங்கம்) என்ன நினைக்கின்றோம் என்பது விடயமல்ல, தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றனர் என்பதே பிரதானம். தமிழர்கள் 13ஆவது திருத்தத்தைத் தமது உரிமைகளுக்கான ஆதாரமாகக் கொள்கின்றனர் என்பதால், அதைத் தக்கவைப்பது அவசியம் என்றும் அமைச்சர் இயம்பியுள்ளார். அமைச்சர் சந்திரசேகர் கருத்துத் தெரிவித்துள்ள விடயத்தை விடவும், அந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ள பாங்கு மிகவும் ஆழமானது. வள்ளுவம் கூறுகின்ற ஓர் ‘உண்மையான தூதுவனின்’ பண்புகளான இடம், பொருள், ஏவல் என அனைத்தையும் உய்த்துணர்ந்து அமைச்சர் தன் கருத்தைக் கனதியாக முன்வைத்திருக்கின்றார். ஆனால், இந்தக் கருத்துக்களை வெறுமனே வெளிப்படையாகப் பேசிவிடுவதால் அநுர அரசாங்கத்தின் கடமை முடிந்துவிட்டதா? என்ற கேள்வியும் எழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை இனப் பிரச்சினைக்கான தீர்வாக மட்டுமல்ல, தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கொள்வதற்குக்கூட தமிழர்கள் தயாரில்லை. குறைந்தபட்ச அதிகாரங்களைக் வழங்காக அந்தத் திருத்தத்தை அரசியலமைப்பில் முழுதாக உள்வாங்கவில்லை என்பதே உண்மை. தமிழர்கள் ஏற்கின்றனர் என்பதால், அதை நீக்கமாட்டோம் என்று கூறும் அநுர அரசாங்கத்துக்கு, 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்படும் காணி, பொலிஸ் அதிகாரங்களை மறுக்கமாட்டோம் என்று கூறுவதற்கு எதற்காக மனம் ஒப்பவில்லை? என்றும் கேட்கவேண்டியிருக்கின்றது. வெறுமனே அரசியலமைப்பில் 13ஆவது திருத்தத்தைத் தக்கவைப்பதாலோ அல்லது, அந்தத் திருத்தம் வலியுறுத்துகின்ற அதிகாரப்பரவலாக்கத்துக்கு அமைய தேர்தல்களை நடத்துவதாலோ ஒருபோதும் தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டுவிட்டன என்று பொருள்படாது. 13ஆவது திருத்தம் வலியுறுத்துகின்ற பிரதான விடயதானங்களை 13ஆவது திருத்தத்தின் இதயமாக இருக்கின்ற அம்சங்களை, வசதியாக வாரிப் பறித்துவிட்டு, ஒரு வெற்றுக்கூட்டைக் காட்டி அதற்குத் தேர்தல் நடத்துவதால், தமிழர்கள் ஒருபோதும் சிலிர்த்துப்போய் சில்லறையைச் சிதறவிடப்போவதில்லை.

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களை விடவும், தேசிய மக்கள் சக்திக்குத் தமிழர்கள் மீது கூடுதல் பொறுப்பும் கடமையும் உள்ளது. ஏனெனில், வரலாற்றில் என்றுமில்லாத வகையில் அவர்கள் அநுர அரசாங்கத்துக்கு ஆணையிட்டிருக்கின்றனர். அந்த ஆணை 13ஆவது திருத்தத்தைத் தக்கவைப்பதற்கல்ல. அதையும் தாண்டி, தமக்கான ஒரு நிரந்தரத்தீர்வைப் பெறுவதற்குத்தான். புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வை எட்டுவோம் எனச் சொல்லிக்கொண்டிருக்கும் அரசாங்கம், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை சில வருடங்கள் தள்ளிப்போட்டிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. இவை அநுர அரசையும் ஏனைய சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்களின் நீட்சியாகக்கொள்ளவே வழிசமைக்கின்றன. எனவே வெறுமனே வாய்ப்பந்தல் போடுவதை விடுத்து செயலில் இறங்கி, புதிய அரசியலமைப்பின் ஊடாக 13 ஆவது திருத்தத்தையும் விட மேலான தீர்வொன்றைத் தருவதே இந்தத் தமிழினத்துக்கும் நல்லது, இந்த அரசாங்கத்துக்கும் நல்லது.






# உள்ளூராட்சித் தேர்தல் கட்டுப்பணம் மீளளிப்பு

கொழும்பு, ஜன. 16

**கடந்த 2023ஆம் வருடம் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கட்டுப்பணம் மீளக் கையளிக்கப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

கடந்த 2023ஆம் வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருந்த 320 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக 80 ஆயிரத்து 670 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். இவர்கள் சுயேச்சைக் குழுக்கள் வாயிலாகவும், அரசியல் கட்சிகள் மூலமாகவும் கட்டுப் பணத்தைச் செலுத்தியிருந்தனர்.

இந்தநிலையில் குறித்த வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படவுள்ள நிலையில், வேட்பாளர்களின் கட்டுப்பணமும் மீளக் கையளிக்கப்படவுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜன.16

தொடங்கொட, வில்பத்துப் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் தொடங்கொடப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



# பலவீனமான தலைவர் சஜித்

## ஹிருணிகா தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பலவீனமான அரசியல்தலைவர் என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கூறியுள்ளார். சஜித் பிரேமதாஸ தனது த்வறுகளைத் துரிதகதியில் திருத்திக்கொள்ளாது போனால் கட்சியில் இருந்து பெரும்பாலானவர்கள் விலகிக்கொள்ளும் நிலை ஏற்படலாம். ஐக்கியமக்கள் சக்தியில் இருந்து அதிருப்தியுற்று விலகும் பலரும் அடுத்த கட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்ளும் சாத்தியம் இருக்கின்றது. எனினும் நான் எந்தவொரு கட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்ளப்போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




# மதுபான வரியால் வருமானம் உயர்வு

கொழும்பு, ஜன. 16

அரசாங்கத்துக்கு மதுபான வரி வருமானம் 11.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் மதுபான வரி 20 சதவீதமாக உயர்த்தப்பட்டதனாலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிகரெட்டுகள் மூலம் அரசாங்கத்துக்கு 7.7 பில்லியன் ரூபா வருமானம் அதிகரித்துள்ளது. எனினும் சிகரெட் விற்பனை 521.5 மில்லியன் ரூபா வரையில் குறைந்துள்ளதாக மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சிகிரியாவில் வெளிநாட்டுப் பிரஜை சாவு

கொழும்பு, ஜன. 16

சிகிரியாவுக்குச் சுற்றுலா சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் திடீர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். செக்குடியரசைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தாரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய இசைக்கலைஞர்
# பாலக்காடு சிறீராம் பங்கேற்கும் 'சங்கமம்'

யாழ்ப்பாணம், ஜன. 16
லண்டன் 'கலா ரசனா' அமைப்பின் ஏற்பாட்டில் 'சங்கமம்' நிகழ்ச்சி யாழ்.கலாசார மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் இந்தியாவின் பிரபல இசைக்கலைஞர் பாலக்காடு சிறீராம் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளார்.

சிறந்த புல்லாங்குழல் கலைஞரான பாலக்காடு சிறீராம், கர்நாடக 'கீபோர்ட்' இசையிலும் வல்லவர். ஏ. ஆர். ரஹ்மான், இளையராஜா, யுவன் சங்கர்ராஜா முதலான இசையமைப்பாளர்களின் இசையமைப்பில் பிரபலமான பல திரைப்பாடல்களைப் பாடியவர். 'படையப்பா' திரைப்படத்தின், "வெற்றிக் கொடி கட்டு..." இவருடைய பாடலே. 'சங்கமம்' நிகழ்ச்சியில் நாளைமறுதினம் சனிக்கிழமை இரண்டு நடன நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதன்படி அமெரிக்காவில் வசிக்கும் ஈழத்து நடனக் கலைஞரான கலைமகள் சந்திரசேகரத்தின் 'சங்கமும் சுனாமியும்' என்ற ஓரங்க நாட்டிய நாடகம் இடம்பெறும். தொடர்ந்து கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் அமைப்பினரின் 'மனம் சுமந்த வலிகள்' நாட்டிய நாடகம் நடைபெறும். பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையிலான இந்த நாட்டிய நாடகத்தில் 30 பேருக்கு மேற்பட்டோர் பங்குபற்றவுள்ளனர். (ச-25)

# இரணைமடுக்குள வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 16
**கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.**

தற்போது பெய்துவருகின்ற கன மழையால் இரணைமடுக் குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதனையடுத்து குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. எனவே குளத்தின் கீழ்ப்பகுதியில் வாழ்கின்ற மக்களை அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்திலுள்ள சிறு குளங்களான கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம், பிரமந்தனாறுக்குளம் ஆகியனவும் வான்பாய ஆரம்பித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-113,27)

# சட்டவிரோத கட்டடங்களுக்கு சட்டநடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.16
சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்குள் சட்டவிரோதக் கட்டடங்கள் 5 அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி நகரசபை தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணப்படுகின்ற சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பாகக் கோரப்பட்ட தகவலுக்கமைய இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,125)



யாழ். போதனா மருத்துவமனை சமூகத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் மருத்துவமனை முன்றலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-22,66)



# இலவசக் கல்வி நிலையம் அராலியில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.16
'பெய்த் லேர்னிங் சென்ரர்' என்ற இலவசக் கல்வி நிலையம் அராலி மேற்கு வட்டுக்கோட்டையில் கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மருத்துவர் வின்ஸ்டன் ஜெசுரன் மற்றும் கல்வி நிலையத்தின் பொறுப்பு ஆசிரியை திருமதி ரோஜா, தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

# காயத்துடன் பரிதவித்த யானை உயிரிழப்பு





கிளிநொச்சி , ஜன.16
கிளிநொச்சி – இரணைமடுக்குளத்தின் கரைப்பகுதியில் கடந்த 15 நாள்களாக காயத்துடன் தவித்துவந்த யானை உயிரிழந்துள்ளது. குறித்த யானை காயத்துடன் அவதிப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரிவித்த நிலையில் அவர்கள் வருகைதந்து சிகிச்சையளித்த போதிலும் யானை உயிரிழந்துள்ளது. தற்போது யானையின் உடலில் துர்நாற்றம் வீசிவருகிறது. யானையை மீட்பதற்கு கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-113)



# வன்முறைகளைத் தடுக்குக; சிவசேனை போராட்டம்

கிளிநொச்சி, ஜன.16
கிளிநொச்சியில் அண்மையில் குருக்கள் ஒருவரைத் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் நீதிகோரி சிவசேனை அமைப்பினர் கடந்த திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் கிளிநொச்சி நகர் பிள்ளையார் ஆலயம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் அண்மைக்காலமாக வன்முறைக்கும்பல்களின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கெதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்காது அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

தாக்கப்பட்டவர்கள் நீதிகோரி பொலிஸ் நிலையம் சென்றால் சமரசத்துடன் செல்லுமாறு பொலிஸார் கூறுகின்றனர்.

எனவே குற்றம் புரிவோர் மீது உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றுப்புதன்கிழமை பொங்கல் விழா சிறப்புற கொண்டாடப்பட்டது. (ச-25,9)


## யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்-2025**

2025ம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையினை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 100.00 செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தபால் உறையில் இட்டு பதிவுத் தபாலில் "கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 31.01.2025 இற்கு முன்னதாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை**

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப**
**2வது மாடி**
**இல12, கே.கே.எஸ் வீதி**
**யாழ்ப்பாணம்**

(CR/44107) J-1


# மரண அறிவித்தல்

மலர்வு 22 . 03 . 1937



உதிர்வு 12 . 01 . 2025

## விமலாதேவி வெற்றிவேலு

122/10, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட விமலாதேவி வெற்றிவேலு அவர்கள் கடந்த 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (பொறியியலாளர், மலேசியா) - செல்வராணி தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்ற பொன்னையா அவர்களின் மருமகளும், தேவகி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, கெங்காதேவி (தாதி), சுசிலாதேவி, உஷாதேவி, பரமேஸ்வரி, வாமதேவன், பரமதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் (மகாவலி திட்டமிடல் உதவிப் பொறியியலாளர்), ஸ்ரீகாந்தா (மின்னணு தொழில்நுட்ப வல்லுநர்), மகேற்கடமூர்த்தி சற்குணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வாசுகி (பிரான்ஸ்), வசுமதி (ஜேர்மனி), வாசுதேவன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும், குமாரதாசன் (முன்னாள் செய்தி ஆசிரியர் உதயன்), அகிலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஆதித்தன், ஆதர்ஷா, அமிர்ஷன், அனிஸ், அரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**122/10, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**அகிலன் வசுமதி (ஜேர்மனி)**

(CS/57204) J-1

# சதுரங்கம் விளையாட்டல்ல வாழ்க்கைக்கான வழிகாட்டி

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டு

சதுரங்கம் என்பது பெட்டிகளுக்கு நடுவேயுள்ள காய்களை நகர்த்தும் விளையாட்டு அல்ல. அது மாணவர்களுக்கு தேவையான வாழ்க்கைக்கான வழிகாட்டியாக விளங்குகின்றது என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார். மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் எக்ஸ்புலோரா நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சதுரங்க விளையாட்டில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சதுரங்கம் விளையாட்டு அல்ல. மாணவர்களின் வாழ்க்கைக்கான வழிகாட்டி. வீழ்வதும் எழுவதும் வாழ்க்கையின் படிநிலை. வீழ்ந்து கிடப்பது வாழ்க்கையின் இழிநிலை என்பதை சதுரங்க விளையாட்டு எடுத்துரைக்கிறது. இந்த விளையாட்டினூடாக மாணவர்களுக்கு பொறுமை, சகிப்புத்தன்மை, அர்ப்பணிப்பு, விட்டுக்கொடுப்பு என்பன வாழ்க்கைப் பாடங்களாக புகுத்தப்படுகின்றன. எவ்வளவுநேரத்தை இழந்தாலும், காய்களை இழந்தாலும், வெற்றி எனும் இலக்கை அடைவேன். எளிதில் வீழ்ந்து விடேன் என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. சிந்தனை விருத்தியையும் மேம்படுத்துகின்றது.

எனவே பெற்றோர் பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு களங்களை அமைத்துக்கொடுக்க வேண்டும். வெற்றி, தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்து விட வேண்டும் - என்றார்.

(ச-இ)


## வேலையாட்கள் தேவை

**கொழும்பு மற்றும் யாழ் நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.**

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்
- சாரதி (கொழும்பில் தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது.

கொழும்பு, யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- **076 440 8948**

(CS/57207) J-1


## அம்மாவின் விண்ணக வாழ்வில் 21 ஆம் ஆண்டு



இறப்பு
16.01.2004

**திருமதி லில்லி தேவசகாயம்**

தோற்றங்கள் மாறிப்போகும்
தோல் நிறம் மாறிப்போகும்
மாற்றங்கள் பல வந்தால்
மனசு கூட மாறிப்போகும்
அகல் விளக்காய் மின்னும்
அம்மா என்னும் அழகான
உறவு மட்டும் ஆண்டுகள்
பல ஆனாலும்
அழியாது எம்மை விட்டு

**28, நக்கா லேன்,**
**சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(CS/57203) J-1


## North Lanka Family Foods (Pvt)Ltd

**1. சிரேஸ்ட தொழில்நுட்ப நிபுணர்** (Senior Technician)

- **கல்வித் தகுதி** - NVQ லெவல் 3 அல்லது 4
- **அனுபவம்** - குறைந்தது 3 வருட அனுபவம்
- **கடமைகள்**
  - மின் உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு பணிகளில் திறமை
  - மின்னியல் தொடர்பான அறிவு அவசியம்
  - தொழில்நுட்ப மற்றும் பராமரிப்பு பணிகளில் முன் அனுபவம்

**2. இளைய தொழில்நுட்ப நிபுணர்** (Junior Technician)

- கல்வித் தகுதி-சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம்
- மேலதிக அனுகூலம்-வெல்டிங் (Welding) தொடர்பான திறமை

**முகவரி:** நோர்த்லங்கா, பமிலி பூட்ஸ் பிரைவட் லிமிட்டெற்
இயக்கச்சி
கிளிநொச்சி

**தகவல்:**

தகுதியுள்ளவர்கள் தங்கள் CV-ஐ எமக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பவும்
மின்னஞ்சல் முகவரி: Nichalas.Sharvio@mas.kitchen
தொலைபேசி இல: **075 076 4510**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான

## திருமதி வேதவல்லி (முத்தையா) அரசரத்தினம்

## அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி



குறையாத விளை பொருட்களும் சான்றோர்களும் குறைவற்ற செல்வமும் ஒருங்கே பொருந்தியுள்ள' நாடே நாடாகும் என்றார் வள்ளுவர். இத்தகைய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதுதான் எமது வேலணை என்னும் ஊர். வேலணையின் மேற்குப் பகுதியில் முடிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் காலஞ்சென்ற முத்தையா சிவபாக்கியம் தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக 1942ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி பிறந்தார் முத்தையா ரீச்சர் என்று அன்பாக அழைக்கப்பட்ட திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் உயர்கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் பயின்று 1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி புவியியல், வரலாறு, தமிழ் ஆகிய பாடங்கள் பயின்று 1964 இல் கலைமாணிப் பட்டம் பெற்றுப் பிறந்த மண்ணுக்கும் கல்வி கற்ற பாடசாலைக்கும் பெருமை சேர்த்தார். 1966 இல் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து அங்கு ஐந்து ஆண்டுகள் கடமையாற்றிய பின்னர் 1971 இல் தான் கல்விகற்ற வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். கல்வியிலும் இறைபக்தியிலும் சிறந்து விளங்கிய இவர் புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியினரின் மகனான திரு அரசரத்தினம் அவர்களை மணந்து இல்லற வாழ்வின் பயனாக காயத்திரி, காலஞ்சென்ற சிறிவத்சன் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுத் தனது வாழ்க்கைப் பயணத்தில் 2000 ஆம் ஆண்டில் தனது விருப்பமான ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்று வாழ்ந்து வந்தவேளை இயற்கையின் நியதியால் 14-1-2025 அன்று தனது 82வது வயதில் சிவபதி அடைந்துள்ளார்.

இவரது மூத்த சகோதரி திருமதி திலகவதி மகாலிங்கம், இளைய சகோதரர் திரு. கந்தசாமி (மன்னாதி). சிறுவயதிலேயே தாயார் இறந்தமையால் சிற்பனையிலுள்ள இவரது தந்தையாரது சகோதரி காலஞ்சென்ற திருமதி தர்மலிங்கம் செல்லம்மா அவர்களது வீட்டில் வளர்ந்தார். தர்மம்மான் என்று அன்பாக அழைக்கப்பட்ட உயர்திரு தர்மலிங்கம் அவர்கள் வேலணையின் பெருமகனாகத் திகழ்ந்தவர். வேலணைக் கிராமசபையின் ஆறாம் வட்டார அங்கத்தவராகச் சேவையாற்றிய பெருமைக்குரியவர் மட்டுமல்ல சங்கத்தார்கேணி ஆதிவைரவர் கோயிலின் தர்மகர்த்தாவாகவும் ஆன்மீகப் பணி புரிந்தவர். அன்னாரைத் தங்கள் பிள்ளைபோலவே சிறப்புற வளர்த்துக் கல்வியறிவூட்டிய பெருமை திரு திருமதி தர்மலிங்கம் செல்லம்மா தம்பதியினரையே சாரும் என்றால் அது மிகையல்ல. திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்களும் தனது மாமனாரது சமூகப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். ஆதிவைரவர் கோயில் சித்திரைக் கஞ்சி, வைகாசிப் பொங்கல் திருவிழா நாட்களில் பேராதனையிலிருந்து வீட்டுக்கு வந்து நிகழ்வுகளை நிர்வகிப்பார். இந்த அனுபவங்களின் காரணமாக தர்மலிங்கம் அவர்களது காலத்திற்குப் பின்னர் கோயிலை நிர்வகித்த அங்கத்தவர் உயர்திரு முத்துத்தம்பி குலசேகரம்பிள்ள அவர்கள் கனடா செல்ல கோயில் நிர்வாகப் பொறுப்பை இவரே ஏற்று அயலவரின் உதவியுடன் ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்.

1979முதல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறியைப் பயின்ற காலம் தவிர்த்து 1971 முதல் ஓய்வு பெற்ற 2000ஆம் ஆண்டுவரை சுமார் 29 ஆண்டுகள் வேலணை மத்திய கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்குப் புவியியல், தமிழ் போன்ற பாடங்களைக் கற்பித்து மாணவர்கள் மத்தியிலும் அதிபர், ஆசிரியர் மட்டத்திலும் நன்மதிப்பைப் பெற்றார். ஆசிரியர்களுக்கு முக்கியமாக இருக்கவேண்டிய அன்பு, பாசம், பரிவு, நட்புணர்வு ஆகிய நற்பண்புகள் மூலம் மாணவர்களிடத்தில் கல்வி, பணிவு, ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை வளர்த்தெடுக்கலாம் என்பதைத் தனக்கேயுரிய சிறப்பான அணுகுமுறை மூலம் நிரூபித்துக்காட்டிய பெருமை இவருக்குரியது. ஆசிரியப் பணியில் தாய்மைப் பண்பினையுங் கலந்து ஒவ்வொரு பிள்ளையையும் தன் பிள்ளைபோல் நேசித்துக் கற்பிக்கும் பாங்கிற்கு திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இதன்காரணமாகவே 2014 இல் கொழும்பில் இயங்கும் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினரால் கௌரவிக்கப்பட்டமை இங்கு நினைவுகூரத்தக்கது.

எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி இருக்கும் சிவகாமி சமேத நடராசப் பெருமான் ஆலயத் திருப்பணி முற்றுப் பெறுவதற்கு ஆசிரியையின் பங்கு அளப்பெரியது. 1999 இல் நடைபெற்ற கல்லூரியின் பொன்விழாக் குழுவிலும் அதிபர் திரு கு. கணேசலிங்கம் அவர்களுடன் இணைந்து செயலாற்றியதுடன் விழாவில் நன்றியுரை ஆற்றிய பெருமையும் இவருக்குண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

அடியேன் இவரிடம் படிக்காதபோதும் அயலவர் என்ற முறையிலும் இடப்பெயர்விற்குப் பின்னரான காலத்தில் எமது கல்லூரி நிர்வாகம் மற்றும் பொருளாதாரத்தேவை சார்பான விடயங்களில் 1997 முதல் தொலைபேசி மூலமும் கடிதங்கள் ஊடாகவும் தொடர்பைப் பேணியதுடன் ஆலோசனைகளையும் பெற்று வந்துள்ளமை ஆண்டவன் கிருபையே என்று சொல்வதே பொருத்தமானதாகும்.

சிரேஷ்ட ஆசிரியை திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்கள் நன்றி கூறும் காட்சி



ஆசிரியப் பணி வெறுமனே கற்பித்தல் செயன்முறை என்பதற்கும் அப்பால் அது ஓர் உன்னதமான வாண்மைப்பணி என்பதை உணர்ந்து அவ்வாறே வாழ்ந்து காட்டிய எமது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய மூத்த ஆசிரியை திருமதி வேதவல்லி அரசரத்தினம் அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் உற்றார், உறவினர், நண்பர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டுகிறேன்.

**ஓம் சாந்தி !**

**சி. இளஞ்செழியன்**

**பழைய மாணவர் (1975 - 1982)**

**வேலணை மத்திய கல்லூரி**

(OS/57205) I-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் அடையாள அட்டைக்கு உயிர்த்தடய அடையாளங்கள் ஏன்?

## கேள்வி எழுப்புகின்றது மக்கள் போராட்ட இயக்கம்

**கொழும்பு, ஜன.16**

**இந்திய நிறுவனம் மூலம் வழங்கப்படும் டிஜிற்றல் அடையாள அட்டைகளில் பொதுமக்களின் உயிர்த் தடய விவரங்களை (பயோமெற்றிக்) இணைப்பதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று மக்கள் போராட்ட இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் அந்த இயக்கத்தின் நிர்வாக உறுப்பினர் வசந்த தெரிவித்துள்ளதாவது:

டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக பொதுமக்களின் உயிர்த்தடய விவரங்கள் ஏன் பெறப்படுகின்றன ?

இந்தச் செயன்முறையின்போது ஒருவரின் மரபணு (டி.என்.ஏ), கைரேகைகள், குரல், காதுகளின் வடிவம், ஒருவர் நடக்கும் முறைமை, கையெழுத்துத் தொடர்பாக தரவுகள் உட்பட பலவகையான தரவுகளைப் பெறுவதற்கு இந்தத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், அரசாங்கத்தின் ஈடுபட்டுடன் டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக இந்த விவரங்கள் அனைத்தையும் சேகரிக்க இந்தியாவுக்கு நாங்கள் அனுமதி வழங்குகின்றோம் என்பதாகும்.

இந்திய நிறுவனத்தின் சேவைகளைப் பெறுவதற்கான இந்த முடிவு முந்தைய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவாகும்.

இந்தியாவில் இதுபோன்ற தகவல் கசிவுகள் ஏற்கனவே பதிவாகியுள்ள நிலையில், எமது நாட்டுத் தகவல்களும் கசியவிடப்படாது என்பதற்கு எந்த உறுதியான நிலைமைகளும் இல்லை - என்றார். (எ-இ)

# குருதிக்கொடை



யாழ்ப்பாணம், ஜன. 16

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினர் நடத்திய மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஏழாலை தெற்கில் அமைந்துள்ள தனியார் வர்த்தக நிலைய மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ரி.ரூபேட் எமில்டன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)



'கல்விக்குக் கரம் கொடுப்போம்' எனும் செயற்றிட்டதினூடாக ஜேர்மனிவாழ் தமிழ்மக்களின் பங்களிப்பில் முல்லைத்தீவு திலகக்கண்ணாச்சிக் குடியிருப்பில் வசிக்கும் கற்றல் தேவையுடைய 55 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-இ)

# 26 நிறுவனங்களால் ரூ.27 மில்லியன் நிலுவை

கொழும்பு, ஜன. 16

கொழும்பு மாநகரசபையின் கீழுள்ள வாகன நிறுத்துமிடங்களை நிர்வகிக்கும் 26 நிறுவனங்கள் 27 மில்லியன் ரூபா நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியுள்ளன.

இதுதொடர்பாகப் பெறப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், லஞ்சம் மற்றும் ஊழல் ஆணையகம் முழுமையான விசாரணையை நடத்த முடிவுசெய்துள்ளது. (ச-இ)

# இந்தியாவுடன் டிஜிற்றல் ஒப்பந்தம்; தேசிய பாதுகாப்புக்கு குந்தகமல்ல!

கொழும்பு, ஜன. 16

இந்தியாவுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்படவுள்ள டிஜிற்றல் அடையாள அட்டையானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாது. இந்த நடவடிக்கையானது 100 வீதம் பாதுகாப்பானது என டிஜிற்றல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த அடையாள அட்டையைத் தயாரிப்பதற்குப் பெரும் தொகை செலவிடப்படும். அதில் 50 சதவீதத்தை இந்தியா வழங்கவுள்ளது.

கைரேகை, முகம் மற்றும் கண் கரு வளையம் ஆகியவற்றை இணைத்து டிஜிற்றல் அடையாள அட்டை தயாரிக்கப்படுவதுடன் டிஜிற்றல் முறையில் கைரேகைகள் பதிவுசெய்யப்படவுள்ளன.

டிஜிற்றல் மயமாக்கல் என்பது அரசின் முன்னுரிமைப் பணி. காணி பரிவர்த்தனைகளில் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ள நிலையில் டிஜிற்றல் மயமாக்கல் மூலம் அதை முறையாக மேற்கொள்ள முடியும்.

புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை இம்மாதம் முதல் அறிமுகப்படுத்தி அடுத்த மாதம் முதல் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அரச வாகனங்கள் 2000 மாயம்!

கொழும்பு, ஜன. 16

மாகாணசபைகளுக்குச் சொந்தமான இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் கடந்த காலங்களில் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது நிர்வாக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமற்போன வாகனங்களில் பல சொகுசுக் கார்கள் மற்றும் ஜீப்வண்டிகள் உள்ளடங்குகின்றன.

இந்தநிலையில், அந்த வாகனங்கள் குறித்த தகவல்களைக் கண்டறியத் தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# அநுர அரசை மக்கள் விரட்டியடிக்கத் தயார்



கொழும்பு, ஜன. 16

போலிவாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்தவர்கள் மீது நம்பிக்கையற்று அவர்களை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வீழ்ந்து விட்டது, இனி அந்தக் கட்சிக்கு மீள் எழுச்சி இல்லை என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

இறுதியாக நடைபெற்ற இரண்டு தேர்தல்களும் எமக்குத் தோல்விகளைத் தந்தாலும் நாம் அதனைப் படிக்கற்களாக மாற்றியுள்ளோம். நாம் தேர்தலின் போது போலி வாக்குறுதிகளை அள்ளி வீசவில்லை - என்றார். (ச-இ)



# மாகாண மட்டங்களில் குற்றவிசாரணைப் பிரிவுகள்

கொழும்பு.ஜன.16

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் மாகாண மட்டத்தில் குற்ற விசாரணைப் பிரிவுகளை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக தற்போதைக்கு மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் தனித்தனியான குற்ற விசாரணைப் பிரிவுகள் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன.

அதனை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய மாகாணங்களிலும் அவ்வாறான தனித்தனியான மாகாண மட்டத்திலான குற்ற விசாரணைப் பிரிவுகளை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறித்த குற்றவிசாரணைப் பிரிவுகள் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படும்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், மிக விரைவில் இதனை நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா, சிகரெட்டுகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.16
8.5 மில்லியன் ரூபா மதிப்புள்ள 35.565 கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபரொருவர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். இதே வேளை மற்றொருவரிடம் மேற்கொண்ட சோதனையில் 600 சட்டவிரோத சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் இருவரிடமும் நீர்கொழும்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்
## பணியாளர்கள் பதவி வெற்றிடங்கள்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர்
   தகைமைகள்:-
   - வயது 25 - 55 வயதுக்குட்பட்டவர்கள்
   - கல்வி - க.பொ.த (சா - த) இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ்மொழி சித்தியுடன் 06பாடங்களிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   - இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது
2. பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்
   தகைமைகள்-
   - வயது 30-55
   - கல்வி - க.பொ.த சாதாரணதரம்
   - தொழில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
3. பெண் உளவள ஆலோசகர்
   தகைமைகள்
   - வயது 30 - 55
   - கல்வித்தகைமை- உளவள கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள். குறைந்தது டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. பகுதிநேர விளையாட்டு உத்தியோகத்தர் (பெண்கள்)
   தகைமைகள்
   - கல்வித்தகைமை- குறைந்தது டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
   - துறை சார்ந்த அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. பெண் முதியோர் பராமரிப்பாளர்
   தகைமைகள்-
   - வயது 35 - 50 வயதுக்குட்பட்டவர்கள்
   - கல்வி - க.பொ.த சாதாரணதரம்
   - தொழில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
   - இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது
6. குறிப்பு - நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
   1. கிராம சேவகரின் நற்சான்றிதழ்
   2. தேசிய அடையாள அட்டை
   3. கல்வித்தகைமை
   4. அனுபவம் தொடர்பான சான்றிதழ்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.
7. விண்ணப்ப முடிவுத் திகதி- 31.01.2025
   - இப்பதவிகளுக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
   - EPF, ETF வழங்கப்படும்
   - தங்குமிடம், உணவு இலவசம்
   - விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
     ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,
     வதிரி, கரவெட்டி.
   - தொலைபேசி இல- 0212263136, 0212265069, 0775147045

செல்வி.தம்பு சரோஜா
(தலைவர்)
(R/44110) J-1

## 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

பிறப்பு
05.02.1949



இறப்பு
17.12.2024

கடந்த 17.12.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் சேதுப்பிள்ளை செல்லக்குட்டி

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை
காலை10.00 மணிக்கு கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றது,
வீட்டுக்கிருத்திய நிகழ்வு 16.01.2025 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்
17.01.2025 வெள்ளிக்கிழமை 11.00 மணியளவில்

**துர்க்கா மணிமண்டபம்**

நல்லூரில் நிகழ இருக்கும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், தொடர்ந்து
நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும்
எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது அம்மாவின் நோய் நிலைமைக்கு
சிகிச்சை வழங்கிய வைத்தியர்களுக்கும் எமது மனமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தயவு செய்து இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 08, கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில்

இங்ஙனம் - குடும்பத்தினர்

T.P:- 0777711091, 0777716192, 0777716191

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 20.02.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 21.02.2025 மற்றும் 22.02.2025

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

PEOPLE'S BANK
Pride of the Nation

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 . 06 . 1928



மறைவு
15 . 01 . 2017

### அமரர் நாகலிங்கம் தவமணிநாயகம்

(ஓய்வுபெற்ற மின்முகாரி சிமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை,
அரங்க ஒலி, ஒளி அமைப்பாளர்)

திதி : திருதியை

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன் உம் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்று
எட்டாண்டுகள் ஆனாலும்
கண் விட்டு மறையவில்லை
உங்கள் நினைவுகள்

கோணப்புலம் வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜனாதிபதி அநுர தலைமையிலான குழுவினரின் சீனப்பயணம் தொடர்பான மேலதிக ஒளிப்படங்கள்.

## முன்னணி வயலின் கலைஞர் திபாஹரன் நேற்று மறைந்தார்!

கொழும்பு, ஜன. 16
இலங்கையின் முன்னணி வயலின் இசைக் கலைஞர் 'இசைக் கலைமணி' சண்முகநாதன் திபாஹரன் நேற்றுக் காலமானார்.
கொழும்பு கட்புல அரங்காற்றுகை கலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றிய இவர் யாழ். இராமநாதன் நுண்கலைக் கழகப் பட்டதாரி ஆவார். உரும்பிராயை பிறப்பிடமாகக் கொண்ட இவர் இணுவில் கிழக்கு மஞ்சத்தடி மற்றும் கொழும்பில் வசித்து வந்த நிலையில் நேற்றுக் காலமானார். (ம-26)



## இலங்கையின்...

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று சீன அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, செங்கம்பளம் விரிக்கப்பட்டு முழு இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதி அநுர சீனமக்கள் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
அங்கு சீன அதிபர் ஜின் பிங் தலைமையிலான குழுவினரும், ஜனாதிபதி அநுரதலைமையிலான குழுவினரும் நீண்டநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போதே, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளுக்கு சீனா முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்று ஜின் பிங் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகளுக்காக ஜனாதிபதி அநுர நன்றியையும் தெரிவித்துள்ளார்.
அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.
இந்தச் சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே.பண்டார ஆகியோரும் பங்கேற்றனர். (அ-ம-இ)

## தீயில்...

இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கரவெட்டி மேற்கு கவுடாலைப் பகுதியைச் சேர்ந்த சண்முகம் பொன்னம்மா (வயது-81) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
தனிமையில் வசித்துவந்த அவர் நுளம்புக்காக தென்னம் பொச்சுமட்டையில் தீ மூட்டியபோது, அவரிலும் தீ பற்றிக்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இறப்பு விசாரணைகளை கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டார். (அ-ம-100)

## 15 ஒப்பந்தங்கள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சீன ஜனாதிபதி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோருக்கு இடையிலான இருதரப்பு சந்திப்பின்போது அரசியல், பொருளாதார, கலாசார உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் 15 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. எமது நாட்டு பொருளாதாரம், கல்வி, ஊடகம் மற்றும் கலாசாரத்துக்கு அவை முக்கியத்துவம் மிக்கவை. இதன்மூலம் பல நன்மைகள் கிடைக்கவுள்ளன. அத்துடன், இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## இலங்கையில்...

தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, ஜனாதிபதியின் சீனப்பயணம் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமன்ன தெரிவித்ததாவது:
இலங்கையின் அபிவிருத்தியில் சீனாவின் தலையீடு தொடர்பிலும், சீனாவின்கடன்கள்தொடர்பிலும், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி தொடர்பிலும் ஜனாதிபதி அநுர தரப்பினர் அன்று கூறிய கருத்துக்களை சீனாவில் வைத்துக் கூறவேண்டாம் என்று கோருகின்றோம். இலங்கை அரசியல் களத்தில் கூறிய கதைகளில் ஒரு வார்த்தையேனும் பீஜிங்கில் வைத்து தெரிவிக்கக்கூடாது என்பதில் ஜனாதிபதி அநுர தரப்பினர் கவனமாக இருக்கவேண்டும் - என்றார்.
சீனாவின் நிதியுதவியில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களை ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் முன்னர் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தொலைபேசி...



அந்தப் பகுதியில் சிலர் வயர்களை அறுத்து, அவற்றுக்குள் உள்ள செப்புக் கம்பிகளை எடுத்து விற்பனை செய்துவருகின்றனர் என்று பொலிஸாரிடம் இதுவரை எட்டுக்கும் மேற்பட்ட தடவைகள் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.
இதைத் தொடர்ந்தே நேற்றுமுன்தினமும் ஒரு தொகுதி வயர்கள் அறுக்கப்பட்டுள்ளன. இதுவரை அறுக்கப்பட்ட வயர்களின் ஒட்டுமொத்தப் பெறுமதி 12 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-20)

## குருநகரில்...

நேற்று இரவிரவாகத் தேடுதல்களும் சுற்றிவளைப்பும் முன்னெடுக்கப்பட்டன.
குருநகர்ப் பகுதிக்குள் எவரும் நுழையாதவாறும், எவரும் இலகுவில் குருநகருக்குள் இருந்து வெளியில் வரமுடியாதவாறும் வீதித்தடைகள் போடப்பட்டிருந்ததுடன், கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. மோப்பநாய்கள் சகிதம் தேடுதல்கள் இடம்பெற்றன. எனினும், என்ன காரணத்துக்காக இந்தத் தேடுதல்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படவில்லை. (அ-ம-22)

## போதையில்...

இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாணவர்கள் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களைச் சிறுவர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மாணவர்களுக்குப் போதை மாத்திரை விநியோகத்தில் ஈடுபட்ட குழுவினரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் துரிதப்படுத்தியுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனைகள் அதிகளவில் இடம்பெறுகின்றன என்று தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஆயிரம்...

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையைத் தொடர்ந்தே அந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நெற்கதிர்கள் முற்றுமுழுதாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அவை அழிவடையும் ஆபத்தில் உள்ளன என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம-113)

## வாள்வெட்டில்...

விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
ஆளுங்கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள்மீதேதாக்குதல்நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## மல்வத்து...

இளைஞர் ஒருவரே காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்று மாலைவரை அந்த இளைஞர் மீட்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-25-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கணக்கியல் துறையில் அறிவுடைய கணினி வடிமைப்பாளர் (Graphics designer with Accounting Knowledge) மற்றும் Technical Officer (TO)- Civil தேவை.

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 760 0403, 077 966 9498

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல Hotel ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.

- Electrician
- Plumbing & Wairing
- A/C Repairing
- Waiter
- Laundry Assistant

முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் தகுந்த சம்பளத்துடன் உணவும் வழங்கப்படும்.

076 624 8529, 077 780 0075

## வாடகைக்குத் தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட பக்கிங் மெசின், பொலித்தீன், PVC Pipe போன்ற பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு நெல்லியடி பிரதான வீதியிலோ அல்லது திக்கம் வீதியிலோ காட்சி அறை போடுவதற்கு ஒரு கட்டடமோ அல்லது வீடோ தேவை.

தொடர்புகளுக்கு : சீ. ரவீந்திரன்
076 726 4071, 076 203 7955


நிகழ்நிலைத் தளங்களில் நடக்கும்

# பெண்களுக்கு எதிரான மீறல்களை கூடிய கவனத்துடன் கையாளுங்கள்

## அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**கொழும்பு, ஜன.16**

**சமூக வலைத்தளங்கள் உள்ளடங்கலாக நிகழ்நிலைத் தளங்களில் பெண்களுக்கு எதிரான முன்னெடுக்கப்படும் மீறல்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பெண் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் அவர்களது துறை சார்ந்தோராலும், பொதுமக்களாலும் வாய்மொழி மூல மீறல்கள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு தொடர்ந்து ஆளாகி வருகின்றனர். முக்கியமாக சமூகவலைத்தளங்களில் பெண்களுக்கு எதிராக அதிகரித்துவரும் அத்துமீறல்கள், அவதூறுகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நாம் பரந்துபட்ட அவதானத்தைச் செலுத்தியுள்ளோம்.

ஒவ்வொரு நபரினதும் கருத்துச் சுதந்திரத்துக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டிய அதேநேரத்தில், ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் என்ற நோக்கத்துக்காக அரசாங்கம் அந்தச் சுதந்திரத்தை சட்டரீதியாக மட்டுப்படுத்த முடியும். நிகழ்நிலை தளங்களில் நிகழ்த்தப்படும் மீறல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியை வழங்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். பாதிப்பை ஏற்படுத்தும்வகையில் பதிவேற்றப்படும் பதிவுகளை அகற்றுவதற்கும், அதுதொடர்பான முறைப்பாடுகளை உரிய காலப்பகுதியில் விசாரணை செய்து பூர்த்தி செய்வதற்குமான கட்டமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

(எ-இ)


# மரண அறிவித்தல்

மலர்வு
23 . 08 . 1945



உதிர்வு
14 . 01 . 2025

## மேரி (பேபி) ஜெபமணி ஜோசவ்

**(சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர், சி.க சங்க சமாச மகளிர் குழுத் தலைவி, யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் குழுத்தலைவி, இணக்கசபை உறுப்பினர் - சண்டிலிப்பாய்)**

கீரிமலை வீதி , பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மேரி (பேபி) ஜெபமணி ஜோசவ் அவர்கள் நேற்றுமுன்தினம் (14.01.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெர்னாண்டோ - மாகிறேற் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜோசவ் (முன்னாள் சுகாதார பரிசோதகர், சமாதான நீதவான்) அவர்களின் அன்பு மனைவியும், ஆஷா, கிஷோயூட் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராகுலனின் அன்பு மாமியாரும், எட்வேட், லலிதா, செல்வநாயகம் (பொன்ராஸ்) ஆகியோரின் சகோதரியும், பொன்மணி, ஜொய்சி, அமிர்தநாயகம் (சாந்தம்) ஆகியோரின் மைத்துனியும், சுரேஸ், ரமேஸ், தினேஸ், கிஷானி, பசில் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாமினி, லோஜினி ஆகியோரின் அன்பு பெரியதாயாரும், டேவின், தனுஜா, பிருந்துஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் நாளை (17.01.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணி அளவில் அவரது இல்லத்தில் (பண்டத்தரிப்பு) நடைபெற்று பி.ப 02.30 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக பண்டத்தரிப்பு புனித செபமாலை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனிதசெபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(CR/57208) J-1

தகவல் :
குடும்பத்தினர்
077 618 7563


# அமைச்சுகளுக்கு இடையே தொடர்பாடல்கள் இல்லை!

## சிகிரியா விவகாரத்தில் சரமாரிக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் அமைச்சுக்களுக்கு இடையில் போதிய தொடர்பாடல்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சிகிரியாவை இரவிலும் பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் வெளியிட்ட கருத்தை பௌத்த சாசன அமைச்சு மறுத்துள்ளது. இதையடுத்தே, இலங்கையில் அமைச்சுக்களுக்கு இடையில் தொடர்பாடல்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சிகிரியா தொடர்பில் இரு வேறுபட்ட அமைச்சுகள், இரு வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தும் நிலைமையே காணப்படுகின்றது. எனவே, அமைச்சுகளுக்கு இடையில் போதிய கருத்துப் பகிர்வை உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதி வெளிவிவகார அமைச்சரால் பகிரப்பட்ட ஒளிப்படங்கள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போலியாக உருவாக்கப்பட்டவை என்று உறுதியாகியுள்ளது. எனவே, விடயத்துக்குப் பொறுப்பேற்று அமைச்சர் பதவி விலகுவாரா? என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(ம-இ)

# ஐஸ் போதை; ஒருவர் கைது

கொழும்பு, ஜன.16

கொழும்புக்கு அருகில், நான்கு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து நான்கரைக் கிலோ ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த போதைபொருளின் பெறுமதி நான்கு கோடி ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நவக முவப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

(ச-இ)

# சந்தையில் தரமற்ற ரின்மீன்கள்

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் விற்பனை செய்யப்படும் ரின் மீன்களில் பாதியளவான ரின்மீன் உற்பத்திகள் எதுவித தரச்சான்றிதழ்களும் அற்றவை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல்களின் பிரகாரம் இலங்கையில் 28 வர்த்தக நாமங்களின் கீழ் ரின்மீன்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் 15 வர்த்தக நாமங்களைக் கொண்ட நிறுவனங்கள் மட்டுமே தரச்சான்றிதழ் உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org